செ.வெ.எண்: 41 நாள்: 24.12.2020

## கரூர் மாவட்டம்

## கரூர் மாவட்டத்தில் புத்தாண்டு கொண்டாங்களுக்கு அனுமதி இல்லை-மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி,இ.ஆ.ப.அவர்கள் தகவல்

**இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:**

கரூர் மாவட்டத்தில் இயங்கிவரும் ஹோட்டலுடன் இணைந்த மதுகூடங்கள் (எப்.எல்.3), இரவு உணவகங்கள், ஹோட்டல்கள் போன்ற இடங்களில் 31.12.2020 மற்றும் 01.01.2021 ஆகிய தேதிகளில் 2021 புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு அனுமதி இல்லை என்றும், தொற்று தடுப்பு மற்றும் கட்டுபடுத்தல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை முன்னிட்டு, 31.12.2020 அன்று இரவு 10 மணிவரை மட்டுமே ஹோட்டல்களுடன் இணைந்த மதுபான கூடங்கள் அரசின் நிலையான வழிகாட்டு விதிமுறைகளை பின்பற்றி FL3 மதுகூடங்களை செயல்படுத்தவும், 2021 புத்தாண்டு கொண்டாட்டங்கள் ஏதும் இருக்கக் கூடாது எனவும், மேற்கண்ட அரசின் விதிமுறைகளை பின்பற்றாதா FL3 மதுக்கூட உரிமைதாரர்கள் மீது தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள் –1981 மற்றும் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 –இன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**